BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

இலக்கியங்களில் ஆடைகள்

ஆய்வாளர்
பெ. தீபா
முனைவர் பட்ட ஆய்வாளர்(முழுநேரம்),
செல்லம்மாள் மகளிர் கல்லூரி,
கிண்டி,சென்னை-32 .
மின்னஞ்சல்முகவரி: deeparajini1991@gmail.com
அலைபேசி எண்: 9626798916.

நெறியாளர்
முனைவர் மோ. ரூபா
உதவி பேராசிரியர் தமிழ் துறை,
செல்லம்மாள் மகளிர் கல்லூரி
கிண்டி,சென்னை-32.

ஆய்வுச் சுருக்கம்

இலக்கியங்களில் ஆடைகள் என்னும் இத்தலைப்பில் ஆடையை குறிக்கும் பல வகையான சொற்கள் இருக்கின்றன. அவை தழையாடை, அறுவை, ஆடை, உடை, தூகில், கச்சை, கலிங்கம், பஞ்சி, பட்டு இவை போன்று பல சொற்கள் இருக்கின்றன. இதில் மேலே குறிப்பிட்ட சொற்கள் மட்டும் பயின்று வரும் சங்க இலக்கியம், சங்க மருவிய இலக்கியம், ஐம்பெரும் காப்பியம், ஐஞ்சிறு காப்பியம், சமய இலக்கியங்கள், பெருங்கதை ஆகியவற்றிலிருந்து பாடல் சான்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரையின் மூலம் மக்களின் வாழ்க்கை நிலை, பண்பாடு தொடக்க காலத்தில் இருந்து தற்போது வரை வளர்ச்சி பெற்றுள்ளதை அறிந்து கொள்ள முடியும்.

குறிச்சொற்கள்

ஆடைகள், ஆடை, சங்க இலக்கியம், உடை, பருத்தி ஆடை, பட்டாடை

முன்னுரை

இலக்கியங்களில் ஆடைகள் என்னும் இவ்வாய்வு கட்டுரையில் சங்க இலக்கியம்,பக்தி இலக்கியம், காப்பியம், இரட்சணிய யாத்திரிகம், சீறாப்புராணம் ஆகியவற்றில் ஆடை பயன்படுத்தி உள்ள அமைப்புகளையும், என்னென்ன ஆடை வகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை ஆதி காலம் முதல் இன்று வரை வளர்ச்சியடைந்ததை இலக்கியங்கள் வழி அறியலாம்.

சங்க இலக்கியத்தில் ஆடை

சங்க இலக்கியம் என்பது பழம் பெரும் இலக்கியமாகும். இவ்விலக்கியத்தில் தழையாடை முதல் பட்டாடை வரை ஆடைகள் பல பெயர்களில் இடம் பெற்றுள்ளன.அவை,

தழையாடை

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகியவற்றில் தழையாடையணிந்த மக்கள் மரத்தின் இலை, பூ, தழைகளை கொத்து கொத்தாக சேர்த்து கட்டி இடையில் அணிந்து கொண்டனர்.

"தழைஅணிந்து அலமரும் அல்குல் தெருவின்"(நற்.320:3)

இப்பாடலடி தழையாடை அணிந்ததற்கான சான்றாக விளங்குகின்றது.

அறுவை

சங்க இலக்கியத்தில் அறுவை என்பது ஆடையை குறிக்கும் மொழியாகும்.அறுவை என்பது சங்கப்பாடல் பலவற்றில் இடம் பெற்றுள்ளன.

"தூவெள்ளறுவை மாயோற்குறுகி"(புறம்.291:2)

என்ற அடியில் வெள்ளை நிறமுடைய ஆடையை அணிந்துள்ளனர் என்பது விளங்குகின்றது.

ஆடை

ஆடை என்ற சொல் அப்படியே சங்கமருவிய இலக்கியத்தில் பயின்று வந்துள்ளது.

"சிலைவில் பகழிச்செந்துவர் ஆடை"(ஐக்.363)

ஐங்குறுநூறு பாடல் வழியாக சிவப்பு நிறத்தில் ஆடை அணிந்துள்ளனர் என்று புலப்படுத்துகின்றது.

உடை

பத்துப்பாட்டில் நக்கீரரால் இயற்றப்பட்ட திருமுருகாற்றுப்படையில் உடை பற்றிக் கூறியுள்ளார்.

"புகை முகந்தன்ன மாசில் தூஉடை"(திருமுருகு.138)

இவ்வடியில் முருகனுக்கு அணியும் உடை குற்றமற்றதாக இருப்பதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

கச்சு

சங்க இலக்கியத்தில் அகநானூற்றில் கச்சு என்பது மார்பில் அணியும் ஆடை வகை என்பதை

"கச்சினன் கழலினன் தேம் தார் மார்பின்ன" (அகம்.76:7)

இப்பாடல் வழி எடுத்துரைக்கப்படுகின்றன.

கச்சை

கச்சை என்பது புடவை வகையைக் குறிக்கின்றது. சங்க இலக்கியத்தில் பல பாடல் இருப்பினும், ஒரு பாடலை இங்கு சான்றாக கொடுக்கப்படுகின்றன.

"வண்ணவரி வில்லேந்தி அம்பு தெரிந்து
நுண் வினைக்கச்சைத் தயக்கறக் கட்டி" (குறிஞ்சி.124-125)

கச்சையாடையை மக்கள் அணிந்துள்ளனர் என்பதை குறிஞ்சிப்பாட்டு வழி புலனாகின்றது.

கலிங்கம்

கலிங்கம் என்னும் கிளவி சங்க இலக்கிய பாடலில் ஏராளமாக இடம்பெற்றுள்ளன. அவற்றில் சில பாடல்கள்,

"கழுவுறு கலிங்கம் கடுப்பச்சூடி" (பதிற்று.8: 6)

"நீலம் நாகம் நல்கிய கலிங்கம்"(சிறுபாண்.95)

"ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம்"(பெரும்பாண்.469)

"சோறமை வுற்ற நீருடை கலிங்கம்"(மதுரைக்.721)

இப்பாடல் அடிகள் சங்க இலக்கியத்தில் கலிங்கம் என்னும் ஆடை பயன்படுத்தியதை மெய்பிக்கின்றன.

சங்க இலக்கியத்தில் துகில்

துகில் என்பது ஆடையை குறிக்கும் கிளவி. சங்க இலக்கியத்தில் எவ்வாறெல்லாம் துகில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை பாடல் வழி அறிந்து கொள்ளலாம்.

"துகில் சேர் மலர்போல் மணிநீர் நிறைந்தன்று"(பரி.12:93)

"அந்துகில் போர்வை அணி பெறத்தைஇ"(கலி.65:4)

"துகில் முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்கு நடை"(முல்லை.53)

"பூந்துகில் மரீஇய ஏந்து கோட்டல்குல்"(நெடுநல்.145)

பல்வேறு பாடல்கள் வழி துகிலாடை பயன்படுத்தி மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

பஞ்சாடை (பருத்தி ஆடை)

பஞ்சிலிருந்து நூல் நூற்று அதிலிருந்து ஆடை நெசவு செய்து உடுத்தியுள்ளனர் என்பது சங்க பாடல்கள் மூலம் விளங்குகின்றது.கணவனை இழந்த பெண்கள் கொட்டையில் இருந்து பஞ்சை நீக்கி நூல் நூற்கும் பணியை மேற்கொண்டு வந்துள்ளனர்.இவர்களை கைம் பெண்கள் என்றும் அழைக்கப்படுள்ளன.

"தாழிமுதற்கலித்த கோவிலைப் பருத்தி"(அகம்.129:7)

"வில்லெறு பஞ்சியின்"(அகம்.133:6)

"எஃகுறு பஞ்சிற்று ஆகி"(நற்.247:4)

"ஆளில் பெண்டிர் தாளின் செய்த

நுணங்கு நுண் பனுவல் போல்" (நற்.353:1-2)

"பருத்தி பெ◌ண்டின் பனுவல் அன்ன"(புறம்.125:1)

"பஞ்சாகி நூலாய்ப் பல பாடுநீ படுதல்"(செங்குந்தர்துகில்விடுதூது.204)

பஞ்சியிலிருந்து நூல் நூற்று அக்காலத்தில் ஆடை அணிந்துள்ளர். நம் நாட்டின் தட்பவெப்ப சூழ்நிலைக்கு ஏற்ற ஆடையாக பருத்தி ஆடைகளே திகழ்கின்றன.பெரும்பாலும் கோடை காலங்களில் மக்களின் தேடலாக பருத்தி ஆடை உள்ளது.

கரைய பட்டுடை நல்கி"(பொருநர்.155)

"பட்டு நீக்கித் துகிலுடுத்தும்"(பட்டினப்.107)

"வட்டும் வழுதுணையும் போல் வாரும் வாழ்வாரே

பட்டும் துகிலும் உடுத்து"(நாலடி.264)

இச்சங்க பாடல்கள் சங்கமருவிய பாடல் போன்றவற்றில் பட்டாடை உடுத்தப்பட்டதை ooவலியுறுத்துகின்றன.

காப்பியங்களில் ஆடை

ஐம்பெரும் காப்பியம், ஐஞ்சிறு காப்பியம் இரண்டிலும், தழையாடை, துகில், கச்சை, கலிங்கம், பஞ்சி, பட்டுப் போன்ற ஆடைகள் பயன்படுத்தியுள்ளனர் என்பதைப் பாடல் வழி அறிய முடியும்.

"பைந்தழை அல்குல் பாவாய்" (சீவக.1499)

"வண்ண வறுவையர்

வளந்திகழ் மறுகு"(மணி.28:53)

"திரை நீராடை யிருநில மடைந்த"(சிலம்பு.4:7)

"மேயுடை அணிந்தகணி வேளையிது என்றான்"(சூளா.1098)

"கலாவப் பல்காழ் கச்சு விரிந்திலங்க" (பெருங்.5.1:138)

"நுண் கலிங்கமொன்று சேர்த்தி"(சூளா.1538)

"துகில் கொடித் தொகுதியுந் தூய சுண்ணம்"(நீல.26)

"பஞ்சி அடிவஞ்சியர்கள் மொய்த்தன் பறித்தர்"(கம்ப.5442)

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்" (சிலம்பு.5: 16)

"பூம்பட்டு எழினி வீழ்த்தார்"(சீவக.740)

இவ்வடிகளிலிருந்து ஆடை வகைகள் பல இருந்தமையை காப்பிய இலக்கிங்கள் வழி தெளிவாகின்றது.

சமய இலக்கியங்களில் ஆடை

சமயம் மக்கள் பின்பற்றும் ஒன்றாக உள்ளது.அதில் இந்து சமயம், கிறிஸ்துவம், இஸ்லாம் போன்ற சமயத்தையே நம் நாட்டில் பெரும்பான்மையான மக்கள் சார்ந்திருக்கின்றன. இந்த மக்களுக்காக படைக்கப்பட்ட இலக்கியங்களிலும் ஆடைகளை பலவகையான சொற்களால் பயன்படுத்தியுள்ளனர் என்பதை இவ்விலக்கியங்கள் வழியாக தெரிந்து கொள்ளலாம்.

"தழைப்பீலி மரவுரி மேல்சார எய்தி"பெரிய.697,கண்.48)

"தழைசெறி மரவ மாலை தயங்கு திண் புயாத்தார்"(சீறாப்.4849)

"பொன் திகழ் அறுவை சாத்திய பூங்கச்சி பொலிய வீக்கி"(பெரிய.414,இயற்கை.11)

"காசை ஆடை மூடி ஓடி" (நாலா.திவ்.1059)

"ஆர் கொலாமிவர் ஆடை உடை நடை" இரட்சண்.2442)

"உடை ஒழிந்தொரு பேச்சு இடை"(பெரிய1355. திருநாவு.85)

"நன்னலத்துவுண் உடை தெரிந்து அளிப்பர்" (இரட்சண்.309)

"கச்சையை இறுக்கிக் கட்டி கால நிலைத் தூன்றிக்கையில்"(இரட்சண்.1139)

"ஆடல் கலிங்கம் அழித்து ஆயிரம் ஆகை கொன்ற" (தமிழ் விடு. 58)

"மறைவிலாது கண்டணி துகில் கொடுதனி" (சீறாப்.648)

"பஞ்சணைப் பொருந்தாரிரு விழி துயிலார்"(சிறாப்.1015)

"பரவு சேரன் தனக்கு உனக்கு பைம்பொன் காணம் பட்டாடை"(பெரிய.3779 கழற்றி.27)

"பட்டு உடுக்கும் அயர்த்து இரங்கும் பாவை பேனாள்"(நால.திவ்.2062)

"பட்டு டையனராய் சாந்தம் பழகு தோளினராய் வாய்ந்த" (சீறாப்.405)

"விலை வரம்பிலா வெண்ணிலை அங்கி மேல் இட்டர்"(இரட்சண்.742)

'விலை வரம்பிலா'என்பது உயர்ந்த விலை மதிப்பற்ற ஆடை என்ற பொருளில் வந்துள்ளது. விலை உயர்ந்த ஆடை என்பது பட்டாடை மட்டுமே, தற்போது வழக்கத்தில் இருந்து வருகின்றது மேலே குறிப்பிட்ட பாடல்கள் அனைத்தும் ஆடை பற்றிய பல்வேறு சொற்கள் இடம் பெற்றுள்ளன. அவை சமைய இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

நிறைவுரை

'இன்றைய செய்தி நாளைய வரலாறு' என்பதைப் போல் இலக்கியங்கள் மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது. மக்களின் பண்பாட்டை அறிய வேண்டும் என்றால் இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடியும். ஒரு பொருள் பல சொல் என்பது தமிழில் உள்ள சிறப்பான வழக்கு. இந்த அடிப்படையில் ஆடை என்பதை மக்கள் பல்வேறு சொற்களில் அழைத்துள்ளனர் என்பதை இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

துணைநூற் பட்டியல்

1. இராதாகிருஷ்ணன், தமிழ்விடு தூது, முல்லை நிலையம், சென்னை.
2. கமலக்கண்ணன் இர.வ, நாலாயிர திவ்ய பிரபந்தம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
3. சண்முகம் பிள்ளை (ப.ஆ) பத்துப்பாட்டு (தொகுதி:1,2), முல்லை நிலையம், சென்னை.
4. தெய்வச் சேக்கிழார், பெரிய புராணம், சைவ நூல் அறக்கட்டளை, சென்னை.
5. நாகராசன்.வி(உ.ஆ), குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை.
6. மாணிக்கவாசகன்.ஞா(உ.ஆ), சிலப்பதிகாரம், உமா பதிப்பகம், சென்னை.
7. விஸ்வநாதன் அ.(உ.ஆ),கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை.
8. ஷைகு அப்துல் காத்ரு நாயனார் லெப்பை .மு, அய்யத்துல் இஸ்லாம் பிரெஸ் 1910, சென்னை.

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.